உ
சிவமயம்



அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும்
வரணியில் வசித்தவரும்
புலம் பெயர்ந்து கனடாவில் வாழ்ந்தவருமாகிய

**அமரர் பொன்னம்பலம் நடராசா**

அவர்களது

# நினைவு மலர்

**09-02-2002**

யாப்பு: எஸ். எஸ். அச்சுதன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



# அமரர்
# பொன்னம்பலம் நடராசா அவர்கள்

அவதாரம்
30-09-1938

அமரத்துவம்
06-01-2002

## மறைவு நாள் வெண்பா

விஷூ வருட மார்கழியில் வெண்மதி தேய் அட்டமியில்
இசைவுறு நாள் ஈர் பத்து இரண்டினிலே -அசைவகல
நடராசா வெனும் பெயரோன் நானிலத்தை விட்டகன்று
அடைந்தான் அரனார் அடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# எமது
# அன்புத்
# தெய்வத்தின்
# திருவடித்
# தாமரைகளுக்கு
# இந்நூல்
# சமர்ப்பணம்



வாசம் குன்றா வாழ்வுதந்து
வழியெங்கும் ஒளிதந்து
தேசம் புகழும் நிலை தந்து
திரும்புமிடமெல்லாம் நினைவு தந்து
அழியாப் பிறப்பெடுக்கும் ஆவல் கொண்டு
ஆன்மா தாங்கிய சரீரம் நீங்கி
ஆண்டவன் நிழலில் அமரத்துவம் கொண்ட
எங்கள் பாசத் தெய்வத்தின் பாதம் பற்றி
எம் கண்ணீர்ப் பூக்களால்
அர்ச்சனை செய்து
அஞ்சலி மலரை அவர் அடிகளில் தூவி
அர்ப்பணம் செய்கின்றோம்......
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோற்றம்

ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பத் தெட்டில்
ஆகு புரட்டாதியதன் இறுதி நாளாம்
தூய முப்பதாம்திகதி கிழமை வெள்ளி
துலங்கு பொன்னம்பலம் செய்தவத்தின் பேறாய்
ஆய சிவநேசத்தின் கருவி நின்று
அவனியிலே வாழ்க்கையினைத் தொடக்க வேண்டி
மாய சிவன் அருள் கொண்டு நடராசன்தான்
வந்துதித்தான் இவ்வுலக பந்தம் கொண்டான்.

# மறைவு

ஈராயிரத் திரண்டு ஆண்டாரம்பம்
இயலுமொரு தைத்திங்கள் முதலாம் வாரம்
ஆறாவது நாளாம் ஞாயிறன்று
அகன்ற புகழ் நடராசன் கனடா மண்ணில்
ஊரார்கள் அயலவர்கள் நண்பர் மற்றும்
உறவெல்லாம் கதறியழ உலகம் நீத்தான்
பேறான அரனுலகம் சென்றடைந்தான்
பெறற்கரிய முத்திநிலை தேடிப் பெற்றான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடற் கூற்று வண்ணம்
## (பட்டினத்தடிகள் அருளியது)

### (இசை வாய்ப்பாடு)

தனதனதான தனதனதான
தந்ததனந்தன தந்ததனந்த
தனனதந்த தனனதந்த
தானனதானன தானனதந்த
தந்ததனதான தனதானனா.

ஒருமடமாதும் ஒருவனும் ஆகி
இன்பசுகம் தரும் அன்பு பொருந்தி
உணர்வு கலங்கி ஒழுகியவிந்து
ஊறுசுரோணித மீது கலந்து

பனியில் ஓர்பாதி சிறுதுளிமாது
பண்டியில் வந்துபு குந்துதிரண்டு
பதுமம் அரும்பு கமடம்இ தென்று
பார்வை மெய்வாய்செவி கால்கைகள் என்ற

உருவமும்ஆகி உயிர்வளர்மாதம்
ஒன்பதும் ஒன்றும் நிறைந்து மடந்தை
உதரம் அகன்று புவியில் விழுந்து
யோகமும் வாரமும் நாளும் அறிந்து

மகளிர்கள் சேனை தரஅணை ஆடை
மண்பட உந்திஉ தைந்து கவிழ்ந்து
மடமயில் கொங்கை அமுதம் அருந்தி
ஓர் அறிவுஈர் அறிவு ஆகிவளர்ந்து

ஒளிநகைஊறல் இதழ்மடவாரும்
உவந்து முகந்திட வந்துதவழ்ந்து
மடியில் இருந்து மழலைமொழிந்து
வாஇருபோஎன நாமம் விளம்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைமணிஆடை அரைவடம் ஆட
உண்பவர் தின்பவர் தங்களொடு உண்டு
தெருவில் இருந்து புழுதி அளைந்து
தேடியபாலரொடு ஓடி நடந்து
அஞ்சுவயதாகி விளையாடியே

உயர்தருஞான குரு உபதேச
முந்தமிழின் கலையும் கரைகண்டு
வளர்பிறை என்று பலரும் விளம்ப
வாழ்பதினாறுபி ராயமும் வந்து

மயிர்முடி கோதி அறுபதநீல
வண்டு இமிர்தண்தொடை கொண்டை புனைந்து
மணிபொன் இலங்கு பணிகள் அணிந்து
மாகதர் போகதர் கூடிவணங்க

மதனசொரூபன் இவன் எனமோக
மங்கையர் கண்டும ருண்டு திரண்டு
வரிவிழிகொண்டு கழிய எறிந்து
மாமயில்போல் அவர் போவதுகண்டு

மனது பொறாமல் அவர்பிறகுஓடி
மங்கல செங்கல சந்திகழ் கொங்கை
மருவமயங்கி இதழ் அமுதுண்டு
தேடியமாமுதல் சேர வழங்கி

ஒருமுதல்ஆகி முதுபொருளாய்இ
ருந்ததனங்களும் வம்பில் இழந்து
மதனசுகந்த விதனம் இது என்று
வாலிப கோலமும் வேறுபிரிந்து

வளமையும்மாறி இளமையுமாறி
வன்பல்விழுந்துஇரு கண்கள் இருண்டு
வயது முதிர்ந்து நரைதிரை வந்து
வாதவிரோதகு ரோதம் அடைந்து
செங்கையினில் ஓர்த டியும் ஆகியே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவது போவது ஒருமுதுகூனு
        மந்திஎனும்படி குந்தி நடந்து
மதியும் அழிந்து செவிதிமிர்வந்து
        வாய் அறியாமல்வி டாமல் மொழிந்து

துயில் வரும்நேரம் இருமல் பொறாது
        தொண்டையும் நெஞ்சும் உலர்ந்து வறண்டு
துகிலும் இழந்து சுணையும் அழிந்து
        தோகையர் பாலர்கள் கோரணிகொண்டு

கலியுகம்மீதில் இவர் மரியாதை
        கண்டிடும் என்பவர் சஞ்சலம்மிஞ்ச
கலகலஎன்று மலசலம் வந்து
        கால்வழி மேல்வழி சாரநடந்து

தெளிவும் இராமல் உரைதடுமாறி
        சிந்தையும் நெஞ்சும்உ லைந்துமருண்டு
திடமும் அழிந்து மிகவும் அலைந்து
        தேறிநல் ஆதரவு ஏதுஎனநொந்து

மறையவன் வேதன் எழுதியவாறு
        வந்தது கண்டமும் என்று தெளிந்து
இனியென கண்டம் இனிஎன தொந்தம்
        மேதினி வாழ்வுநி லாதினிநின்ற

கடன்முறை பேசும்என உரைநாவு
        தங்கிவிழுந்து கைகொண்டு மொழிந்து
கடைவழி கஞ்சி ஒழுகிடவந்து
        பூதமுநாலுசு வாசமும் நின்று
        நெஞ்சுதடுமாறி வரும் நேரமே

வளர்பிறைபோல எயிரும் உரோம
        மும்சடையும் சிறுகுஞ்சியும் விஞ்ச
மனதும் இருண்ட வடிவும் இலங்க
        மாமலை போல்யம தூதர்கள் வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலைகொடுவீசி உயிர்கொடு போக
மைந்தரும் வந்துகு னிந்தழநொந்து
மடியில் விழுந்து மனைவிபுலம்ப
மாழ்கினரே இவர்காலம் அறிந்து

பழையவர்காணும் எனும் அயலார்கள்
பஞ்சு பறந்திட நின்றவர்பந்தர்
இடும் எனவந்து பறையிடமுந்த
வேபிணம்வேக விசாரியும் என்று

பலரையும் ஏவி முதியவர்தாம்இ
ருந்தசவம்கழு வுஞ்சிலர் என்று
பணிதுகில் தொங்கல் களபம் அணிந்து
பாவகமேசெய்து நாறும் உடம்பை

வரிசை கெடாமல் எடும்எனஓடி
வந்து இளமைந்தர்கு னிந்துசுமந்து
கடுகிநடந்து சுடைலை அடைந்து
மானிட வாழ்வென வாழ்வெனநொந்து

விறகுஇடைமுடி அழல் கொடுபோட
வெந்து விழுந்துமு றிந்துநிணங்கள்
உருகிஎலும்பு கருகி அடங்கி
ஓர்பிடி நீறும்இ லாத உடம்பை
நம்பும் அடியேனை இனிஆளுமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அமரர் பொன்னம்பலம் நடராசா அவர்களது வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்

இந்து மகா சமுத்திரத்தின் முத்து என வர்ணிக்கப் படுவதும் பல் வளங்களும் நிறைந்து பேரழகு கொண்டு ஏராளம் உல்லாசப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் நாடாக ஒரு காலம் திகழ்ந்ததுமாகிய இலங்கைத் தீவின் வடபால் யாழ். குடா நாட்டில் பருத்தித்துறை - யாழ்ப்பாணம் வீதியில் அமைந்துள்ளது செழிப்பான அச்சுவேலி என்னும் கிராமம். பல வளங்களும் கொண்ட அக்கிராமத்தில் வாழ்வாங்கு வாழ்ந்த பொன்னம்பலம் - சிவநேசம் தம்பதியர்க்கு மகனாக 1938.09.30 அன்று திரு. நடராசா அவர்கள் வந்துதித்தார். சிறு வயது முதலே நல்லொழுக்க மும் பிறர்க்கு உதவும் பண்பும் நிறையப் பெற்றவராக விளங்கிய நடராசா அவர்கள் ஊரார், அயலவர், உற்ற சுற்றம், சகமாணவர்கள், ஆசிரியர் ஆகிய எல்லோரையும் ஒரு சேரக் கவர்ந்த நல் மாணாக்கனாகத் திகழ்ந்தார்.

கல்வியை நிறைவு செய்தபின் கிழக்கிலங்கையில் திருகோணமலை நகரில் ஓர் உல்லாசப் பயணிகள் விடுதியில் (Tourist Hotel) முகாமையாளராகப் பதவி யேற்றார். பதவியேற்ற சில காலத்தின்பின் பெற்றோருடைய விருப்பின்பேரில் வந்தாரை வாழ வைக்கும் வரணி மாநகரில் அன்பும், தயையும், பொறையும் தலையாய நெறியாகக் கொண்ட கந்தையா - யோகம்மா தம்பதிகளின் புதல்வியான தங்கலக்ஷ்மி என்னும் மங்கை நல்லாளைக் கரம்பிடித்து இன்ப மயமான இல்லறம் கண்டதன் விளைவாக ரஜீவ்குமார், மயூரி என இரு குழந்தைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வங்களைப் பெற்றார். திருமணமான இடமான வரணியில் வாழ்ந்து வந்த காலத்தில் தாய் நாட்டில் பிரச்சினைகள் தலைதூக்கவே பிள்ளைகளின் எதிர்காலம் கருதி குடும்பத்துடன் 1994ல் கனடாவிற்குக் குடி பெயர்ந்தார். புலம் பெயர்ந்த இக் கனடிய மண்ணிலும் தன்னால் முடிந்த அத்தனை சமூக சேவைகளிலும் ஈடுபட்டுத் "தனக்கென வாழாது பிறர்க்குரியாளனாகப் பரிணமித்து", நல்ல கணவனாக, நல்ல தந்தையாக, நல்ல உறவினனாக, நல்ல அயலவனாக, நல்ல நண்பனாக சுருங்கக்கூறில் நல்ல தமிழனாக சமூகத்தின் மத்தியில் மிக மதிப்போடு வாழ்ந்து வந்தார்.

என் செய்வது? மனித வாழ்க்கை நிலையற்றது. நூறாண்டு கடந்து வாழ்பவர்களும் இருக்கிறார்கள். அற்பாயுளில் மடிந்தவர்கள் கதைகளையும் அறிகிறோம். அப்பர் பெருமான் எண்பத்தொரு வயதுவரை வாழ்ந்தார்; சம்பந்தரோ பதினாறு வயதிலேயே இறைவனடி சேர்ந்தார்.

"இறப்பு என்பது நாம் பிறக்கும்போது நிர்ணயிக்கப் படுவது", அந்த வகையில் நடராசா அவர்களும் அறுபத்து மூன்றாம் அகவை நிறைந்து சில மாதங்களிலே ஊர், அயல், உற்ற சுற்றம் எல்லாம் கதறியழ விஷு வருடம், மார்கழித் திங்கள் 22ம் நாள் ஞாயிற்றுக்கிழமை (06.01.2002) இறைவனடி சேர்ந்து விட்டார். "வருடக் கணக்காக வாய்விட்டு அழுது புலம்பினாலும் இறந்தவர் மீழ்வதில்லை. நாம் போக இருக்கும் வழியும் அதுவே யாகும்" என்றார் ஔவையார். எனவே பிரிந்தவரையிட்டுத் துயர் கொள்ளாது, அவரது ஆத்மா சாந்தி பெறும் வகையில் நல் வழியில் நடந்து அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்போமாக!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவி தங்கலக்ஷ்மி துயரம்

நீரினை நிலவினை வானத்தைப் பூமியை
நேராகச் சாட்சி வைத்தே
நீரெனை வதுவை செய்திட்ட நந்நாளினை
நினைந்துமே நானழுவனோ
பாரினில் உயிரிலும் மேலதாய்க் கருதிடும்
பாங்குறு தாலி தன்னை
பதைபதைத் தேங்கவே பாதியில் கூற்றுவன்
பறித்ததை நினைந்தழுவனோ
சீரிளம் பாலகர் தந்தையார் தமைவிட்டுச்
சென்றதை எண்ணி யேங்கி
சிந்தையே தடுமாறித் துயருற்று நின்றிடும்
செயலினை நினைந்தழுவனோ
ஆறெனை விழிகள் நீர் சொரிந்திடப் பரிதவித்
தழுதேங்கி நிற்பதல்லால்
அனலிடைப் புழுவெனத் துடிதுடித்திடு மனம்
ஆறவோர் வழி கூறுமே.

## மகன் ரஜீவ்குமார் துயரம்

உயர் பண்பும் நிறையன்பும் ஊட்டி வைத்தாய்
உயர் வாழ்க்கை நான்காண உழைத்தாய் கல்வி
பயிர் என்னுள் வளர நிதம் ஊக்குவித்தாய்
பள்ளியிலே முதல்வனென ஆக்கி வைத்தாய்
அயராது என் மேன்மை குறியாய் நின்ற
அப்பாவே என்னை விடுத்தெங்கு சென்றாய்
துயர் தாங்க முடியாது தத்தளித்துத்
துடிக்குமெனை யாரொருவர் தேற்றுவாரே.

## மகள் மயூரி துயரம்

வேண்டுவன வேண்டுகின்ற போதிலெல்லாம்
விருப்புடனே வாங்கிவரும் அருமை அப்பா
நீண்ட தொலை சென்றதுமேன் எம்மைவிட்டு
நெருப்பெனவே தவிக்கிறதே துயரம் நீங்கள்
மாண்ட செய்தி பொய்யாகிப் போகாதோஎம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனவருத்தம் தீர ஒரு மார்க்கமுண்டோ
ஆண்டவனே உமைப் பறித்தான் ஏது செய்வோம்
அப்பாவே இனி எம்மை ஆற்றுவாரார்.

**சகோதரர்கள்:**

தியாகராசா, தர்மலிங்கம், திவ்யநாதன்

**சகோதரிகள்:**

லோகநாயகி, கமலநாயகி, ருக்மணி

**மைத்துனர்கள்:**

சந்திரசேகரமுதலி, ஆலாலசுந்தரம், கனகதுரை, ஹரிச்சந்திரன்

**உடன் பிறவாச் சகோதரர்கள்:**

இராமநாதன், சண்முகராசா

**உடன் பிறவாச் சகோதரி:** தேவகுமாரி

**மைத்துனிமார்:** தங்கேஸ்வரி, தங்கராணி, செல்வச்சரஸ்வதி, தேவி, இந்திரகுமாரி

**பெறாமக்கள்:** ஜெயா, மாலினி, மைதிலி, தேவகி, ரதி, சுபாசினி, ஜீவா, லதா, ரமணன், லக்கிதரன், லவன், ரஜந்தி, ஜெயந்தி, வசந்தி, சதீஷ்குமார், சாந்தி, கீர்த்திகா, நிரஞ்சன், நிர்மலா, செல்வரஞ்சன், சிறீரஞ்சன், அகிலன், கஜேந்திரன், லோதிகா

**மருமக்கள்:** குமரன், சாந்தி, மாறன், முகுந்தன், வசந்தன், சுகந்தன், கருணாகரன்,சொர்ணலிங்கம், பிரபாகரன், நகுலன், நிவேதா, சுகந்தா, மனோகரன், கரன், சுசீவன் ஆகியோர் துயரம்

பாசத்திற் கிலக்கணமாய் வாழ்ந்தாயிங்கு
பண்புடனே எமை மதித்தாய் மதிக்க வாழ்ந்தாய்
நேசித்தாய் எமையெல்லாம் என்று மெங்கள்
நெஞ்சத்தில் இடம் பிடித்தாய் பிறந்த எங்கள்
தேசத்தை நீ நீத்தாய் என்றிருந்தோம்
திகழுமிந்தப் பூமியையே நீ ஏன் நீத்தாய்?
ஆசைக்கோர் உறவினனாய் இருந்த எங்கள்
ஐயா நீ போனதெங்கே கூறுவாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேற்றம்

நேற்றிருந்தார் இன்றைக்கு இங்கே இல்லை
நீள்புவியின் பெருமையிது என்றே உண்மை
சாற்றுகவி வள்ளுவனார் சொன்ன அந்தச்
சத்தியமாம் வார்த்தையினைச் சரியாய் நோக்கில்
ஏற்றிடுவோம் உண்மையதே சனித்த பேர்கள்
என்றோ ஒரு நாளுலகு நீத்தல் திண்ணம்
கூற்றுவனார் வயது குலம் ஆண்பெண் பேதம்
கொள்வதில்லை என்பதனால் அமைதி கொள்வோம்.

## வருந்த வேண்டா!

"இவன் பிறப்பதுமில்லை. இவன் ஒருமுறை இருந்து பின்னர் இல்லாது போவதுமில்லை. இவன் பிறப்பற்றான்; அனவரதன்; இவன் சாகவதன்; பழையோன்; உடம்பு கொல்லப்படுகையில் இவன் கொல்லப்படான்."

"நைந்த துணிகளைக் கழற்றி எறிந்துவிட்டு மனிதன் புதிய துணிகள் கொள்ளுமாறுபோல ஆத்மா நைந்த உடல் களைக்களைந்து புதியனவற்றை எய்துகிறது."

"இதனை ஆயுதங்கள் வெட்டமாட்டா; தீ எரிக்காது; நீர் இதனை நனைக்காது; காற்று உலர்த்தாது!

"உயிர்களின் ஆரம்பம் தெரியவில்லை. நடுநிலைமை தெளிவுடையது. இவற்றின் இறுதியுந் தெளிவில்லை. இதில் துயரப்படுவதென்ன?

"எல்லோருடம்பிலுமுள்ள இந்த ஆத்மா கொல்லப்பட முடியாதது. ஆதலால், நீ எந்த உயிரின் பொருட்டும் வருந்துதல் வேண்டா!!

-பகவத்கீதை-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
எங்கள் வாழ்வின் வழிகாட்டியாய்த் திகழ்ந்து
எம்மை விட்டுப் பிரிந்து இறைபதம் எய்திய
எங்கள் குடும்ப ஒளிவிளக்கு

## அமரர்
## பொன்னம்பலம் நடராசா

அவர்கள் மறைவுற்றவேளை நேரில் வந்து அனுதாபங்கள் தெரிவித்தவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், தொலைபேசி மூலம் எமக்கு ஆறுதல் கூறி எமது துக்கத்தில் பங்கு கொண்ட அன்பு உள்ளங்களுக்கும்,

பார்வையாளர் மண்டபத்திற்கு வருகைதந்து இறுதி அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் மலர்வளையம் சாத்தியவர்களுக்கும் இறுதிக்கிரியைகளிலும் அந்தியேட்டி, சபிண்டீகரணம் முதலிய நிகழ்வுகளிலும் கலந்து ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தனை புரிந்த அனைவர்க்கும்,

இந்த நினைவு மலரை அழகுற அச்சமைத்துதந்த பரடைஸ் அச்சகத்தாருக்கும்,

தேவையானபோதெல்லாம் உதவி ஒத்தாசைகள் புரிந்த அனைவர்க்கும், மற்றும் யாவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளையும், வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**குடும்பத்தவர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Paradise Print Tel: 416-288-6449**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org